


சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் புயல் மழையால் பாதிக்கப்பட்ட திரு.வி.க. நகர் வடக்குப் பகுதியில் 10 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார். பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் முன்னிலை வகித்தார். மேயர் பிரியா ராஜன், புனிதவதி எத்திராசன் எம்.சி. ஆகியோர் தலைமை வகித்தனர். இதில் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., தில்லை கதிரவன், ஆர். ராஜன், கி. ரமேஷ், கினார் ஆறுமுகம், புனிதவதி, எஸ்.புஷ்பராஜ், மா.ருத்ரமூர்த்தி, ஜி.கிருஷ்ணகுமார் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.



தமிழ்நாடு சுற்றுலா துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நீலகிரி உதகை சோலூர் பேரூராட்சியில் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை ஆய்வு செய்தார் மாவட்ட ஆட்சியர் திருமதி மு.அருணா அரசு அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# மாநிலங்களுக்குப் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்துவதாக ஒன்றிய அரசு மீது வழக்கு!

## உச்சநீதிமன்றத்தில் கேரள அரசு தொடர்ந்தது!

புதுடெல்லி, டிச.14-

மாநிலங்களுக்கு பொருளாதார நெருக்கடியை ஒன்றிய அரசு ஏற்படுத்தி வருவதாக குற்றம்சாட்டி, கேரள அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது.

ஒன்றிய அரசு உரிய நேரத்தில் நிதி பகிர்வை வழங்காதது, கடன் வாங்க அனுமதிக்காதது உள்ளிட்ட காரணங்களால் நிதி நெருக்கடியை சந்தித்து வருவதாக கேரள அரசு தெரிவித்து வந்தது. இந்நிலையில், ஒன்றிய அரசுக்கு எதிராக கேரள அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அந்த வழக்கில், மாநில சுயாட்சிக்கு எதிராக ஒன்றிய அரசு பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வருவதாகவும், ஒன்றிய அரசின் செயல், மாநில சுயாட்சி உரிமைக்கு எதிரானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இல்லாத காரணங்களைக் கூறி கடன் வாங்குவது உள்ளிட்ட விவகாரங்களில் மாநிலங்களுக்கு பல்வேறு தடைகளை ஒன்றிய அரசு ஏற்படுத்தி வருவதாகவும், இதன் காரணமாக நிதி நெருக்கடி அதிகரித்து வருவதாகவும் கேரள அரசு குற்றம்சாட்டியுள்ளது.

நிதிபகிர்வு விவகாரத்தில் கூட்டாட்சியை ஒன்றிய அரசு படிப்படியாக சிதைத்து வருவதாகவும், தனது மனுவில் கேரள அரசு கூறியுள்ளது. இதனிடையே, கேரள அரசுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிக்க உடனடியாக 26 ஆயிரம் கோடி ரூபாய் நிதி திரட்ட அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இல்லாவிட்டால் கேரள அரசு கடும் நிதி நெருக்கடிக்குள் தள்ளப்படும் என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

அரசியல் சாசனப் பிரிவு 131யைப் பயன்படுத்தி இந்த மனுவை உச்சநீதிமன்றத்தில் கேரள அரசு தாக்கல் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.



மிக்ஜாம் புயல் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி 7வது வட்டம் கார்கில் நகரில் வசிக்கும் 2000 குடும்பங்களுக்கு கழக மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம். எல்.ஏ. தலைமையில் மீட்பு பணிகளை துரிதப்படுத்தவும், நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் சிறப்பு பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், வனத்துறை அமைச்சர் மதிவேந்தன், நாமக்கல் மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.என்.ராஜேஷ்குமார், நாமக்கல் பெ.ராமலிங்கம்ஆகியோர் மக்களுக்குத் தேவையான அரிசி, இருவகை பருப்பு, எண்ணெய் என 25 வகையான மளிகைப் பொருட்கள் குடிநீர், பிரட், போர்வை, பாய், போன்ற அத்தியாவசியப் பொருட்களை வழங்கினர். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் வி.இராமநாதன் திருவொற்றியூர் கிழக்கு பகுதி கழக செயலாளர், மண்டல குழு தலைவர் தி.மு. தனியரசு, த.கார்த்திகேயன், 5வது வட்டக் கழக செயலாளர் கே.பி.சொக்கலிங்கம்எம்.சி., ஆர்.சந்தர், கே.கார்த்திகேயன், பா.பல உமாபதி, எஸ். மகேந்திரன், எம்.கார்த்திக், உசிலைவேந்தன், தொ.மு.ச. தேசிங்கு, எம்.தயாநிதி, எஸ்.கே.இளங்கோ, எஸ்.விஜயராகவன், பா.கஜா, முன்னாள் மகளிர் தொண்டர் அணி ராதா தங்கவேலு, கே.புனிதா, சி.சந்திரலேகா, பி.ஹேமலதா, ஆர்.பிரகாஷ், இரா.கணேசன், அ.ஆனந்தன், மூ.ராம் குமார் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள கலந்து கொண்டனர்.

## மிக்ஜாம் புயல் சேதம்:

# ஒன்றியக் குழு 2-வது நாளாக ஆய்வு!

## இரு பிரிவுகளாகச் சென்று பாதிப்பு பகுதிகளை பார்வையிட்டனர்!

சென்னை, டிச. 14-

மிக்ஜாம் புயல் பாதிப்பு ஆய்வு செய்ய ஒன்றிய குழு திங்களன்று சென்னை வந்தனர். நேற்று முன்தினம் இரண்டு பிரிவுகளாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர். நேற்று ஒன்றியக் குழு சார்ந்த விவசாயம், கூட்டுறவு மற்றும் விவசாயிகள் நலத்துறை இணை இயக்குநர் டாக்டர் ஏ.கே.சிவ்ஹரே, ஆற்றல் அமைச்சகத்தின் துணை இயக்குநர் பாவ்யா பாண்டே, சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சகத்தின் தலைமைப் பொறியாளர் விஜய்குமார் உள்ளிட்டோர் சென்னை கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், வில்லிவாக்கம் சிட்கோ நகர், அம்பத்தூர் தொழிற்பேட்டை, கொரட்டூர் உள்ளிட்ட பகுதிகளில் காலை ஆய்வு மேற்கொண்டனர்.

கடந்த 3ஆம் தேதி மற்றும் 4ம் தேதி மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட கீழ்ப்பாக்கம், வில்லிவாக்கம் சிட்கோ பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புகளை புகைப்படங்களை வைத்தும், தற்போது உள்ள நிலவரத்தை தமிழக அரசு துறை சார்ந்த அதிகாரிகள் ஒன்றிய குழு உறுப்பினர்களுக்கு விரிவாக விளக்கினர். அம்பத்தூர் தொழிற்பேட்டை பகுதிகளில் பணி புரிபவர்கள் மற்றும் பகுதி மக்களிடம் பாதிப்புகள் குறித்து ஒன்றிய குழு கேட்டறிந்தனர்.

மத்திய குழுவின் தலைவர் குணால் சத்யார்த்தி தலைமையிலான மற்றொரு குழு தென் சென்னைக்கு உட்பட்ட வேளச்சேரி கல்கி நகர், பள்ளிக்கரணை, நாராயணபுரம் ஏரி, பெரும்பாக்கம் செம்மஞ்சேரி, தையூர், கண்டிகை, கேளம்பாக்கம், வண்டலூர் உயிரியல் பூங்கா உள்ளிட்ட பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் சேதங்களை நேரில் ஆய்வு செய்தனர். பாதிப்பு விவரங்கள் புகைப்படங் களாக காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. புகைப்படங் களை பார்வையிட்ட ஒன்றிய குழுவினர் தமிழக அரசின் அதிகாரிகள் மற்றும் பொதுமக்களை நேரில் சந்தித்து பாதிப்பு விவரங்களை கேட்டறிந்தனர்.

ஆய்வுக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஒன்றிய குழு தலைவர் குணால் சத்தியார்த்தி, அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டபோதும், இயற்கை பேரிடர் ஏற்பட்டிருப்பதாகவும், இருந்தாலும் அரசு உடனடியாக நிவாரண பணிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

## சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் புயல்மழையால் பாதிக்கபட்ட

# திரு.வி.க.நகர் வடக்குப் பகுதியில் 10 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் !

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார் .

சென்னை, டிச. 14 -

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஆணையை ஏற்று சென்னை கிழக்கு மாவட்டம் திரு. வி.க.நகர் வடக்கு பகுதியில் புயல் மழை காரணமாக தண்ணீர் தேங்கி, மின்சாரம் தடைபட்டு மிகவும் பாதிக்கபட்டிருந்த அருந்ததி நகர், டிக்காஸ்டர் சாலை, பி.எஸ். மூர்த்திநகர், கன்னிகாபுரம் வாசுகி நகர், கஸ்தூரிபாய் காலனி, பாடிசன் புரம் ஆகிய இடங்களை 5.12.2023 அன்றே அமைச்சர் பி. கே.சேகர்பாபு. நேரடியாக வந்து பார்வையிட்டு சம்பந்தபட்ட அதிகாரிகளை வரவழைத்து இராட்சத மோட்டார் மூலம் தேங்கிய தண்ணீர் மற்றும் முறிந்த மரங்களை அகற்றி உடனடியாக மின் விநியோகம் வழங்க அதிகாரிகளுக்கு ஆலோ சனை வழங்கினார்.

மேலும் அருந்ததி நகரில் உள்ள 2000 குடும்பங்க ளுக்கும், பெரம்பூர் பாரதி சாலை, செல்வ விநாயகர் தெரு, பட்டேல் சாலை. ஜட்ஜ் பரமசிவம் தெரு, புழல் சிவஞானம் தெரு, சின்னய்யா நியு காலனி, ஆகிய இடங்களில் உள்ள 2000 குடும்பங்களுக்கும் சந்திப்பன் தெரு, ராஜிவ்காந்தி நகர் மங்களபுரம் , ஏகாங்கிபுரம், ஆகிய இடங்களில் உள்ள 1500 குடும்பங்களுக்கும் பிரிஸ்லி நகர், கிருஷ்ணதாஸ் சாலை ஆகிய இடங்களில் உள்ள 2500 குடும்பங்களுக்கும் பி. எஸ்.மூர்த்தி நகரில் 2000 குடும்பங்களுக்கும் உணவு, பால், பிரட்,தண்ணீர், அரிசி, பாய், போர்வை,மற்றும் நிவாரண உதவிகளை மேயர் பிரியா ராஜன்,புனிதவதி எத்திராசன்,ஆகியோர் தலைமையில் பகுதி கழக செயலாளர் செ.தமிழ்வேந்தன் அவர்கள் முன்னிலையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்.

நிகழ்வில் தாயகம் கவி எம்.எல்.ஏ.,. தில்லை கதிரவன், ஆர். ராஜன், கி.ரமேஷ், கினார் ஆறுமுகம், புவனவதி, வட்டச் செயலாளர்கள் எஸ். புஷ்பராஜ், மா.ருத்ரமூர்த்தி, ஜி. கிருஷ்ணகுமார், பகுதி இளைஞரணி அமைப்பாளர் சே.மணிமாறன், V.ஜெகன், சுவிட்பாபு, ஒய்.மணிகன்டன், மு.முகமதுரஃபி, யோகாநந்தம். ஆனந்த், மனோஜ். வி.கிரிதரன். வி.வினோத். கே.மாரி, ச.சந்தோஷ். கார்த்திகேயன், இந்திரா. மாரியப்பன், கிஷோர், சே.தியாகராஜன்,

யோகேஷ், த.ஆகாஷ், குமார்.மற்றும் கழக தோழர்கள் இளைஞரணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்...

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. தலைமையில்

# சென்னை மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம் !

## மாவட்ட அமைப்பாளர் வே.தேவேந்திரன் அறிவிப்பு !

சென்னை டிச:14

சென்னை மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வே. தேவேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு எம்.சி தலைமையில் மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் திருமதி சி.சியாமளா,துணைத் தலைவர் மோ. பாலசந்தர் ஆகியோர் முன்னிலையில் சென்னை மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம், காம்தார் நகர் மாவட்ட கழக அலுவலகத்தில் இன்று (14.12.2023 வியாழக்கிழமை ) மாலை 6:30 மணி அளவில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர்,துணைத் தலைவர், மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாவட்ட கழக வழக்கறிஞர்கள், பகுதி கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்; வரும் நாடாளுமன்ற தேர்தலில் சட்டத்துறையின் சார்பில் பணியாற்றுவதற்கு, மாவட்டத்தின் சார்பாக மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்,சட்டமன்ற ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் முதல் நிலை ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம் செய்தல் மற்றும் அவர்கள் எவ்வாறு கழகப் பணி யாற்றுவது குறித்து மாவட்ட செயலாளர் ஆலோசனை வழங்குகிறார். இவ்வாறு வே. தேவேந்திரன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப்பூண்டி தொகுதி எளாவூர் பகுதியில் மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு நிவாரண உதவிகளை மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார். உடன் எஸ்.ராமஜெயம், மு.வேதாசலம், ராஜ்குமார், சீனு, அமுலு, அறிவழகன், எளாவூர் ராஜா பார்த்தசாரதி, சங்க தலைவர் ரகமத்புல்லா, ரகோத்தமன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்



எழும்பூர் தொகுதி, 99வது வட்டத்தைச் சேர்ந்த 1,500 குடும்பங்களுக்கு எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், கழகச் செய்தி தொடர்பு தலைவரும் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினருமான டி.கே.எஸ். இளங்கோவன் நிவாரண உதவிகளை வழங்கினார். இந்நிகழ்விற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் யு.விஜயபோஸ் முன்னிலை வகித்தார். எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருஷோத்தமன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ். குமார், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் மா.காந்தி, மு.கமலக்கண்ணன், 108வது வட்டத் துணைச் செயலாளர் சீனிவாசன், எழும்பூர் சி.ரமேஷ், பகுதிப் பிரதிநிதி சி.குணசேகரன், கவிதா, முன்னாள் பகுதிப் பிரதிநிதி பாரத் பூசைமணி, தினேஷ், ஜான்சன், புகழேந்தி, திடீர் நகர் தட்சிணாமூர்த்தி, சாலைமா நகர் ஷீலா உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், முன்னோடிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# அமெரிக்காவில் மூளைச் சாவு அடைந்த மாணவனின் உடல் உறுப்புகள் தானம் !

## அரசு மரியாதையுடன் உடல் தகனம்!

நெல்லை, டிச. 14-

அமெரிக்காவில் மூளை சாவு அடைந்து உடல் உறுப்பு தானம் செய்யப்பட்ட 12ம் வகுப்பு மாணவன் சகாய ஜெபாஸ¬க்கு தமிழ்நாட்டில் அரசு மரியாதை செலுத்தப்பட உள்ளது. நெல்லையைச் சேர்ந்த சகாய தாமஸ் ரூபன் - வின்சி தம்பதி குவைத் நாட்டில் பணிபுரிந்து வருகின்றனர். சகாய தாமஸ் ரூபன் - வின்சி தம்பதிக்கு சகாய ஜெபாஸ் என்ற மகன் உள்ளார். சகாய ஜெபாஸ், அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி ஆய்வு மையத்துக்கு கல்வி சுற்றுலா சென்றுள்ளார். அமெரிக்காவுக்கு கல்வி சுற்றுலா சென்ற மாணவன் சகாய ஜெபாஸ் நவம்பர் 23ம் தேதி குளத்தில் குளித்தபோது நீரில் மூழ்கி யுள்ளார்.

பின்னர் அவரை மீட்டு அமெரிக்காவில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நீரில் மூழ்கிய மாணவனுக்குத் தேவையான சிகிச்சை கிடைக்க அவரது பெற்றோர் கோரிக்கை வைத்த நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அயலக தமிழர் நல வாரிய தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி ஆகியோர் உதவி கரம் நீட்டினர். இந்நிலையில், சிகிச்சை பலனின்றி டிசம்பர் 4ம் தேதி சகாயஜெபாஸ் மூளை சாவு அடைந்தார்.

பின்னர் மூளை சாவு அடைந்த மாணவனின் உடல் பெற்றோர் அனுமதியுடன் உறுப்பு தானம் அளிக்கப்பட்டது. மாணவன் உடல் உறுப்பை தானம் செய்த பெற்றோரின் செயலை பாராட்டி பத்திரமும், பதக்கமும் அமெரிக்காவில் வழங்கப்பட்டது. உடல் உறுப்பு தானம் செய்யப்பட்ட மாணவனின் உடலை தமிழ்நாட்டுக்கு கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுக்கு வரும் மாணவன் உடல் அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்படும் என்று அயலக தமிழர் நல வாரிய தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி மேற்கு ஒன்றியம் கோரமங்கலம் ஊராட்சி மன்ற தலைவரும் மாவட்ட பிரதிநிதியுமான எஸ்.நரசிம்மராஜு துணைவியார் செஞ்சுலட்சுமி உடல்நிலை குறைவால் இயற்கை எய்தினார். தகவல் அறிந்த திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ நேரில் சென்று மலர் மாலை அணிவித்து குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார் அருகில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணன் ஆர்த்தி ரவி, உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



சென்னை வடகிழக்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டோருக்கு நிதியுதவி வழங்குதல் நிகழ்ச்சி சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் மேற்கு பகுதி 3வது வட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக செயலாளர், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவுறுத்தல் படி திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.மா.அருள்தாசன் முன்னிலையில் புயல் நிவாரணமாக 100 குடும்பத்தினருக்கு தலா ஆயிரம் ரூபாய் நிதியை சென்னை வடகிழக்கு மாவட்ட கழக வர்த்தக அணி அமைப்பாளர் லயன் வீ. தியாகராஜன் வழங்கினார். இதில் எம்.ரகுநாதன், யூ.எஸ்.குறளரசன், மு.மாணிக்கவேலன், ஏ.ராஜேந்திரன், வீ.தனபால், பி.கௌரிசங்கர், எம்.ராஜா, ஏ.அறிவழகன், தி.சாய்வெங்கடேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.